**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு</u>**

**<u>CC No.1/2022</u>**

அ.சா.– 1 திரு. மன்னன் த/பெ. நீலகண்டன் நாள்–02.05.2025

எதிரி ஆஜர்.

சாட்சி மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை–**

1. நான் எங்கு பணிபுரிகிறேன் என்று கேட்டால் இரயில்வே துறையில் ஏசி டெக்னீசியனாக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரி யாரென்று கேட்டால் என்னுடன் பணிபுரியும் ஏசி டெக்னீசியன். அவரை எவ்வளவு காலமாக தெரியுமென்று கேட்டால் 15 வருடங்கள். பணி நிமித்தமாக தான் அவரை தெரியுமா என்று கேட்டால் ஆம். எந்த வருடத்திலிருந்து எதிரியை தெரியும் என்று கேட்டால் நினைவில்லை 15 வருடங்களாக தெரியும். இவ்வழக்கினை எந்த தொகைக்காக எதிரி மீது தாக்கல் செய்துள்ளளேன் என்று கேட்டால் எதிரி எனக்கு ரூ.4,50,000/– தரவேண்டும் அதற்காக காசோலை கொடுத்தார் அது சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ரூ.4,50,000/– தொகையை எந்த தேதியில் என்ன வகையில் எங்கு வைத்து கொடுத்தேன் என்று கேட்டால் ஜீன் 2020 ல் எதிரியின் மனைவியிடமும், அவரிடமும் எதிரியின் வீட்டிற்கு சென்று ரூ.5,00,000/– கொடுத்தேன். எதிரி அவரது தம்பி மருத்துவ செலவிற்காகவும், வீட்டு கடன் செலுத்த வேண்டும் என்று கேட்டதால் கொடுத்தேன்.

2. நான் எவ்வாறு எதிரியின் வீட்டிற்கு சென்றேன் என்று கேட்டால் இரயிலில் சென்றேன். எதிரியின் வீடு எங்குள்ளது எனது வீடு எங்குள்ளது என்று கேட்டால் எதிரியின் வீடு வேப்பம்பட்டிலும், எனது வீடு செங்கல்பட்டிலும் உள்ளது. நான் பணம் கொடுத்ததாக சொல்லும் காலம் கொரோனா காலம் என்றால் சரிதான். நான் டியூட்டிக்கு செல்லும் போது கொடுத்தேன். எதிரி என்னிடம் எத்தனை காசோலைகள் கொடுத்துள்ளார் என்றால் ஒன்று. எதிரியுடன் எவ்வளவு நாட்கள் கொடுக்கல், வாங்கல் இருந்தது என்றால் அவர் பழகிய காலத்தில் இருந்தே சிறு தொகைகள் கொடுத்து வந்தேன் அவர் நாணயமாக நடந்து கொண்டதால் பெரிய தொகையை கொடுத்தேன். இந்த வழக்கு காசோலை இல்லாமல் எதிரியின் பெயரில் சில காசோலைகளும் என்னிடம் உள்ளது என்றால் இல்லை. எதிரி வழங்கிய காசோலை எண்கள்.039659

முதல் 039661 வரையான காசோலைகள் நான் வங்கியில் போட்டு பணமாக்கியுள்ளேன் என்றால் சரிதான். 05.07.2021 அன்று இவ்வழக்கு காசோலையை எதிரி கொடுத்தார் என்றாலும், மேலும் 06.07.2021 அன்று ரூ.2,50,000/– வங்கி மூலமாக எனக்கு எதிரி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அவர் கொடுக்க வேண்டிய ரூ.4,50,000/– த்திற்கு காசோலை போக மீதி பணத்தை வங்கி மூலமாக செலுத்தினார். எனது வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி ரூ.7,00,000/– கேட்டதாகவும், நான் ரூ.5,00,000/– கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். பின்னிட்டு ஜீன் மாதம் 2021 ல் ரூ.2,50,000/– பணி ஓய்வின் போது அவசரமாக வேண்டும் என்று கேட்டார் அதனை திருப்பி கொடுத்தார்.

3. நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பில் ரூ.2,50,000/– கொடுத்த விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எனது புகார், பிரமாண வாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பில் மேற்படி ரூ.2,50,000/– குறித்து எந்த விவரங்களும் குறிப்பிடவில்லையென்று சொன்னால் சரியல்ல குறிப்பிட்டுள்ளேன் எனது வழக்கறிஞரிடம் விவரத்தை கூறியுள்ளேன். இவ்வழக்கு காசோலை என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது என்று கேட்டால் இவ்வழக்கு காசோலையை தாக்கல் செய்த போது 3 வங்கிகளிலும் 88 other reason என்று திருப்பப்பட்டது. வங்கியில் எதிரி அவரது பழைய காசோலை புத்தகம் தொலைந்துவிட்டதாக கூறி புதிய காசோலை புத்தகம் பெற்றுவிட்டதால் நான் தாக்கல் செய்த காசோலை மேற்படி காரணத்திற்காக திருப்பப்பட்டது என்று கூறினார்கள். காசோலை எண்கள் 039659 முதல் 039661 வரையான காசோலைகள் மட்டும் எப்படி பணமாக்கப்பட்டது என்று கேட்டால் மேற்படி காசோலைகள் வங்கியில் நான் பணமாக்க தாக்கல் செய்த போது எதிரி செக் புத்தகத்தை கேன்சல் செய்யவில்லை.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.